# DEPOSITION OF WITNESS
*(Chapter XXIII Code of Criminal Procedure)*

## IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE, TENKASI.

**SC.No.139/2025**

| | | | |
|---|---|---|---|
| அ.சா . | : 6 | நாள் | : 31.10.2025 |
| பெயர் | : குருவய்யா | தொழில் | : |
| தந்தை பெயர்/ | : | சமயம் | : |
| கிராமம் | : | வயது | : |
| தாலூகா | : | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 31th day of October 2025.

**சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.**

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது சங்கரன்கோவிலில் குடியிருந்து கொத்தனார் வேலை பார்த்து வருகிறேன். நான் சுமார் 10 வருடங்களுக்கு முன்பு கொத்தனார் சங்கத்திற்கு பொருளாராக இருந்தேன். ஒவ்வொரு மாதமும் 1ம் தேதி சங்க கூட்டம் நடைபெறும். காலை 10 மணியிலிருந்து மதியம் 2.00 மணி வரை நடைபெறும். சில நேரங்களில் 3 மணிக்கு மேலும் நடைபெறும். சங்கரன்கோவிலிருந்து கழுகுமலை செல்லும் சாலையில் காளியம்மன் கோவில் பக்கம் எங்கள் சங்க அலுவலகம் உள்ளது. எங்கள் ஊரில் சங்கர் தியேட்டர் முக்கில் ஜான்பாண்டியன் புகைப்படம் வைக்கப்பட்டிருந்தது அதில் யாரோ செருப்பை வீசியுள்ளார்கள் இது எங்களுக்கு தெரியாது. கடந்த 10 வருடங்களுக்கு முன்பு பூலித்தேவர் ஜெயந்தி அன்று அந்த

சம்பவம் நடந்தது. சுமார் மதியம் 1 மணியளவில் அவ்வாறு நடந்தது. நாங்கள் சத்தம்கேட்டு வெளியே வந்து பார்த்தபோது சுமார் 5, 6 கார் வந்தது எல்லா காரிலும் தேவர் படம் ஒட்டியிருந்தது. கோவிலை ஒட்டியுள்ள உள்ள எங்களது அலுவலகத்தில் காரில் வந்தவர்கள் கத்தி, கம்புகளுடன் வந்து தாக்க முற்பட்டார்கள். எங்கள் ஜாதி பற்றியும், எங்கள் ஜாதி பெண்களைப்பற்றியும் அவதூறாகவும், தரக்குறைவாகவும் பேசிக்கொண்டே அருகிலிருந்தவரின் ஒரு கடையை அடித்து நொறுக்கிவிட்டார்கள் எங்கள் அலுவலகத்தில் செருப்பை வீசினார்கள் ஆனால் அந்த கடை இஸ்லாமியருக்கு சொந்தமானது. அங்கிருந்து ஓடிவிட்டார்கள். அன்றைய தினம் நான் பார்த்தவர்களை இன்று நீதிமன்றத்தில் என்னால் அடையாளம் கூற முடியுமா என்றால் முடியாது. பள்ளன வெட்டனும் பள்ளச்சிய கட்டனும் என்று சொல்லிக் கொண்டு வந்தார்கள். மாரியப்பன் என்பவருக்கு கல் வீசப்பட்டதால் கல் தாக்கிய காயம் ஏற்பட்டது. மற்றவர்களுக்கு பெருமளவு காயம் இல்லை. பேருந்து நிலையம் அருகில் ஏதோ சம்பவம் நடந்ததாக கேள்விப்பட்டேன். அந்த நபர்கள் சிறிது நேரத்தில் அங்கிருந்து ஓடிவிட்டார்கள். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதிக்கப்பட்டது.**

**குறுக்குவிசாரணை**

என்னை போலீசார்கள் விசாரித்தார்கள் என்றும் அவ்வாறு விசாரித்தபோது கடந்த 01.09.2015 மதியம் 2 மணிக்கு எங்கள் ஊர் காளியம்மன் கோவிலில் நான்

பேசிக் கொண்டிருந்தபோது தியேட்டர் ரோடு விலக்கு பஸ்ஸ்டாப் அருகே சத்தம்கேட்டபோது நாங்கள் கோவிலை விட்டு வெளியே வந்து பார்த்தபோது பூலித்தேவர் நினைவு தினத்திற்கு கார்களில் சென்றவர்கள் பேருந்து நிறுத்தம் அருகில் உள்ள ஜான்பாண்டியன் படத்தில் செருப்பை வீசிவிட்டு வருவதாக சிலர் சொன்னார்கள் என்றும் அவர்கள் வாகனத்தில் முத்துராமலிங்க தேவரின் படம் ஒட்டப்பட்டிருந்தது என்றும் அந்த வாகனங்களில் வந்தவர்கள் ரமேஷ்குமார் என்ற இளைய பசும்பொன், முத்துப்பாண்டியன், மணிகண்டன், கருத்தபாண்டியன், ஜமின், இராமசந்திரன், கனகசபாபதி, கண்ணன் என்று கேள்விப்பட்டேன் என்றும் அந்த வாகனத்தில் வந்தவர்கள் அவதூறாக பேசிக்கொண்டே எங்கள் அலுவலகத்தில் கற்களை வீசியதில் எங்கள் தெருவைச் சேர்ந்த மாரியப்பன், குணசேகரன் ஆகியோர்களுக்கு காயம் ஏற்பட்டது என்றும் எங்கள் கோவில் முன்பாக நின்று கொண்டு பட்டா கத்தி, அரிவாளை உயர்த்திக் காட்டி உயிரோடு வெட்டிக் கொல்லனும் என்று மிரட்டினார்கள் என்றும் அவர்கள் கார் கண்ணாடியை அவர்களே உடைத்துக் கொண்டார்கள் என்றும் அன்னை பத்ரகாளி என்ற லாரி கண்ணாடியையும், மற்ற ஒரு லாரி கண்ணாடியையும் உடைத்தார்கள் என்றும் பின்னர் கழுகுமலை ரோட்டில் உள்ள முஸ்லீம் சமுதாயத்தினரின் கடைகளையும் உடைத்தார்கள் என்றும் நாங்கள் திரும்ப வரும்போது எங்கள் இன மக்களை அழைத்து வந்து காந்திநகரை அழித்துவிடுகிறோம் என்று கூறிவிட்டு போனார்கள் என்றும் நாங்கள் வீட்டிற்கு திரும்பி விட்டோம் என்றும் இதுசம்பந்தமாக 01.10.2016

அன்று காவல் துணை கண்காணிப்பாளர் என்னை விசாரித்தார் என்று போலீசார் விசாரணையில் கூறியிருக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு எதிரிகளை அடையாளம் தெரியும் என்றும் ஆனால் எதிரிகள் அவர்கள் கேட்டுக்கொண்டதால் எதிரிகளுக்கு பயந்து அவர்களை காப்பாற்றும் நோக்கத்துடன் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் கு.வி.</u>**

நான் சொன்ன நாள் சொன்ன நேரத்தில் அலுவலகத்தில் இருந்ததாக கூறுவதும், சங்கர் தியேட்டர் அருகில் சம்பவம் நடந்ததாக கேள்விபட்டேன் என்று கூறுவதும் எங்கள் அலுவலகத்தின் அருகில் முத்துராமலிங்க தேவர் படம் குறித்த கார்கள் வந்தது என்றும் அதில் இருந்தவர்கள் பட்டா கத்தி, கல், கம்பு ஆகியவற்றுடன் எங்கள் அலுவலகத்தை சேதப்படுத்தினார்கள் என்று கூறுவது பொய் என்றால் சரியல்ல. நான் சொன்ன நாள் சொன்ன நேரத்தில் சம்பவ இடத்தில் இல்லை என்றும் வாகனங்களை பார்த்ததில்லை என்றும் சொன்னால் சரியல்ல. வழக்கிற்காக நடக்காத சம்பவத்தை நடந்ததாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2025.10.31 17:32:19 +0530

## DEPOSITION OF WITNESS
*(Chapter XXIII Code of Criminal Procedure)*

## IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE, TENKASI.

**SC.No.139/2025**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா . | : | 5 | நாள் | : | 31.10.2025 |
| பெயர் | : | மாரியப்பன் | தொழில் | : | |
| தந்தை பெயர்/ | : | | சமயம் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| தாலூகா | : | | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 31st day of October 2025.

**சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.**

**முதல் விசாரணை**

நான் தற்போது சங்கரன்கோவிலில் குடியிருந்து கொத்தனார் வேலை பார்த்து வருகிறேன். ஒவ்வொரு மாதமும் 1 ம் தேதி சங்க கூட்டம் நடைபெறும். காலை 10 மணியிலிருந்து மதியம் 2.00 மணி வரை நடைபெறும். சில நேரங்களில் 3 மணிக்கு மேலும் நடைபெறும். சங்கரன்கோவிலிருந்து கழுகுமலை செல்லும் சாலையில் காளியம்மன் கோவில் பக்கம் எங்கள் சங்க அலுவலகம் உள்ளது. எங்கள் ஊரில் சங்கர் தியேட்டர் முக்கில் ஜான்பாண்டியன் புகைப்படம் வைக்கப்பட்டிருந்தது அதில் யாரோ செருப்பை வீசியுள்ளார்கள் இது எங்களுக்கு தெரியாது. கடந்த 8 வருடங்களுக்கு முன்பு பூலித்தேவர் ஜெயந்தி அன்று அந்த சம்பவம் நடந்தது. சுமார் மதியம் 1 மணியளவில் அவ்வாறு நடந்தது. நாங்கள் சத்தம்கேட்டு வெளியே

வந்து பார்த்தபோது சுமார் 5, 6 கார் வந்தது எல்லா காரிலும் தேவர் படம் ஒட்டியிருந்தது. கோவிலை ஒட்டியுள்ள உள்ள எங்களது அலுவலகத்தில் காரில் வந்தவர்கள் கத்தி, கம்புகளுடன் வந்து தாக்க முற்பட்டார்கள். எங்கள் ஜாதி பற்றியும், எங்கள் ஜாதி பெண்களைப்பற்றியும் அவதூறாகவும், தரக்குறைவாகவும் பேசிக்கொண்டே அருகிலிருந்தவரின் ஒரு கடையை அடித்து நொறுக்கிவிட்டார்கள் எங்கள் அலுவலகத்தில் செருப்பை வீசினார்கள் ஆனால் அந்த கடை இஸ்லாமியருக்கு சொந்தமானது. அங்கிருந்து ஓடிவிட்டார்கள். அன்றைய தினம் நான் பார்த்தவர்களை இன்று நீதிமன்றத்தில் என்னால் அடையாளம் கூற முடியுமா என்றால் முடியாது. பள்ளன வெட்டனும் பள்ளச்சிய கட்டனும் என்று சொல்லிக் கொண்டு வந்தார்கள். மாரியப்பன் என்பவருக்கு கல் வீசப்பட்டதால் கல் தாக்கிய காயம் ஏற்பட்டது. மற்றவர்களுக்கு பெருமளவு காயம் இல்லை. பேருந்து நிலையம் அருகில் ஏதோ சம்பவம் நடந்ததாக கேள்விப்பட்டேன். அந்த நபர்கள் சிறிது நேரத்தில் அங்கிருந்து ஓடிவிட்டார்கள். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதிக்கப்பட்டது.**

**<u>அரசு தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

என்னை போலீசார்கள் விசாரித்தார்கள் என்றும் அவ்வாறு விசாரித்தபோது கடந்த 01.09.2015 மதியம் 2 மணிக்கு எங்கள் ஊர் காளியம்மன் கோவிலில் நான் பேசிக் கொண்டிருந்தபோது தியேட்டர் ரோடு விலக்கு பஸ்ஸ்டாப் அருகே

சத்தம்கேட்டபோது நாங்கள் கோவிலை விட்டு வெளியே வந்து பார்த்தபோது பூலித்தேவர் நினைவு தினத்திற்கு கார்களில் சென்றவர்கள் பேருந்து நிறுத்தம் அருகில் உள்ள ஜான்பாண்டியன் படத்தில் செருப்பை வீசிவிட்டு வருவதாக சிலர் சொன்னார்கள் என்றும் அவர்கள் வாகனத்தில் முத்துராமலிங்க தேவரின் படம் ஒட்டப்பட்டிருந்தது என்றும் அந்த வாகனங்களில் வந்தவர்கள் ரமேஷ்குமார் என்ற இளைய பசும்பொன், முத்துப்பாண்டியன், மணிகண்டன், கருத்தபாண்டியன், ஜமின், இராமசந்திரன், கனகசபாபதி, கண்ணன் என்று கேள்விப்பட்டேன் என்றும் அந்த வாகனத்தில் வந்தவர்கள் அவதூறாக பேசிக்கொண்டே எங்கள் அலுவலகத்தில் கற்களை வீசியதில் எங்கள் தெருவைச் சேர்ந்த மாரியப்பன், குணசேகரன் ஆகியோர்களுக்கு காயம் ஏற்பட்டது என்றும் எங்கள் கோவில் முன்பாக நின்று கொண்டு பட்டா கத்தி, அரிவாளை உயர்த்திக் காட்டி உயிரோடு வெட்டிக் கொல்லனும் என்று மிரட்டினார்கள் என்றும் அவர்கள் கார் கண்ணாடியை அவர்களே உடைத்துக் கொண்டார்கள் என்றும் அன்னை பத்ரகாளி என்ற லாரி கண்ணாடியையும், மற்ற ஒரு லாரி கண்ணாடியையும் உடைத்தார்கள் என்றும் பின்னர் கழுகுமலை ரோட்டில் உள்ள முஸ்லீம் சமுதாயத்தினரின் கடைகளையும் உடைத்தார்கள் என்றும் நாங்கள் திரும்ப வரும்போது எங்கள் இன மக்களை அழைத்து வந்து காந்திநகரை அழித்துவிடுகிறோம் என்று கூறிவிட்டு போனார்கள் என்றும் நாங்கள் வீட்டிற்கு திரும்பி விட்டோம் என்றும் இதுசம்பந்தமாக 01.10.2016 அன்று காவல் துணை

கண்காணிப்பாளர் என்னை விசாரித்தார் என்று போலீசார் விசாரணையில் கூறியிருக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு எதிரிகளை அடையாளம் தெரியும் என்றும் ஆனால் எதிரிகள் அவர்கள் கேட்டுக்கொண்டதால் எதிரிகளுக்கு பயந்து அவர்களை காப்பாற்றும் நோக்கத்துடன் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் கு.வி.</u>**

நான் சொன்ன நாள் சொன்ன நேரத்தில் அலுவலகத்தில் இருந்ததாக கூறுவதும், சங்கர் தியேட்டர் அருகில் சம்பவம் நடந்ததாக கேள்விபட்டேன் என்று கூறுவதும் எங்கள் அலுவலகத்தின் அருகில் முத்துராமலிங்க தேவர் படம் குறித்த கார்கள் வந்தது என்றும் அதில் இருந்தவர்கள் பட்டா கத்தி, கல், கம்பு ஆகியவற்றுடன் எங்கள் அலுவலகத்தை சேதப்படுத்தினார்கள் என்று கூறுவது பொய் என்றால் சரியல்ல. நான் சொன்ன நாள் சொன்ன நேரத்தில் சம்பவ இடத்தில் இல்லை என்றும் வாகனங்களை பார்த்ததில்லை என்றும் சொன்னால் சரியல்ல. வழக்கிற்காக நடக்காத சம்பவத்தை நடந்ததாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2025.10.31 17:32:36 +0530

# DEPOSITION OF WITNESS
*(Chapter XXIII Code of Criminal Procedure)*

## IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE, TENKASI.

## SC.No.139/2025

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா . | : | 4 | நாள் | : | 31.10.2025 |
| பெயர் | : | சித்திரைவேல் | தொழில் | : | |
| தந்தை பெயர்/ | : | | சமயம் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| தாலூகா | : | | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 31th day of October 2025.

**சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.**

**முதல் விசாரணை**

நான் தற்போது சங்கரன்கோவிலில் குடியிருந்து கொத்தனார் வேலை பார்த்து வருகிறேன். நான் சுமார் 10 வருடங்களுக்கு முன்பு கொத்தனார் சங்கத்திற்கு துணைத் தலைவராக இருந்தேன். ஒவ்வொரு மாதமும் 1ம் தேதி சங்க கூட்டம் நடைபெறும். காலை 10 மணியிலிருந்து மதியம் 2.00 மணி வரை நடைபெறும். சில நேரங்களில் 3 மணிக்கு மேலும் நடைபெறும். சங்கரன்கோவிலிருந்து கழுகுமலை செல்லும் சாலையில் காளியம்மன் கோவில் பக்கம் எங்கள் சங்க அலுவலகம் உள்ளது. எங்கள் ஊரில் சங்கர் தியேட்டர் முக்கில் ஜான்பாண்டியன் புகைப்படம் வைக்கப்பட்டிருந்தது அதில் யாரோ செருப்பை வீசியுள்ளார்கள் இது எங்களுக்கு தெரியாது. கடந்த 10 வருடங்களுக்கு முன்பு பூலித்தேவர் ஜெயந்தி அன்று

அந்த சம்பவம் நடந்தது. சுமார் மதியம் 1 மணியளவில் அவ்வாறு நடந்தது. நாங்கள் சத்தம்கேட்டு வெளியே வந்து பார்த்தபோது சுமார் 5, 6 கார் வந்தது எல்லா காரிலும் தேவர் படம் ஒட்டியிருந்தது. கோவிலை ஒட்டியுள்ள உள்ள எங்களது அலுவலகத்தில் காரில் வந்தவர்கள் கத்தி, கம்புகளுடன் வந்து தாக்க முற்பட்டார்கள். எங்கள் ஜாதி பற்றியும், எங்கள் ஜாதி பெண்களைப்பற்றியும் அவதூறாகவும், தரக்குறைவாகவும் பேசிக்கொண்டே அருகிலிருந்தவரின் ஒரு கடையை அடித்து நொறுக்கிவிட்டார்கள் எங்கள் அலுவலகத்தில் செருப்பை வீசினார்கள் ஆனால் அந்த கடை இஸ்லாமியருக்கு சொந்தமானது. அங்கிருந்து ஓடிவிட்டார்கள். அன்றைய தினம் நான் பார்த்தவர்களை இன்று நீதிமன்றத்தில் என்னால் அடையாளம் கூற முடியுமா என்றால் முடியாது. பள்ளன வெட்டனும் பள்ளச்சிய கட்டனும் என்று சொல்லிக் கொண்டு வந்தார்கள். மாரியப்பன் என்பவருக்கு கல் வீசப்பட்டதால் கல் தாக்கிய காயம் ஏற்பட்டது. மற்றவர்களுக்கு பெருமளவு காயம் இல்லை. பேருந்து நிலையம் அருகில் ஏதோ சம்பவம் நடந்ததாக கேள்விப்பட்டேன். அந்த நபர்கள் சிறிது நேரத்தில் அங்கிருந்து ஓடிவிட்டார்கள். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதிக்கப்பட்டது.**

**<u>குறுக்குவிசாரணை</u>**

என்னை போலீசார்கள் விசாரித்தார்கள் என்றும் அவ்வாறு விசாரித்தபோது கடந்த 01.09.2015 மதியம் 2 மணிக்கு எங்கள் ஊர் காளியம்மன் கோவிலில் நான்

பேசிக் கொண்டிருந்தபோது தியேட்டர் ரோடு விலக்கு பஸ்ஸ்டாப் அருகே சத்தம்கேட்டபோது நாங்கள் கோவிலை விட்டு வெளியே வந்து பார்த்தபோது பூலித்தேவர் நினைவு தினத்திற்கு கார்களில் சென்றவர்கள் பேருந்து நிறுத்தம் அருகில் உள்ள ஜான்பாண்டியன் படத்தில் செருப்பை வீசிவிட்டு வருவதாக சிலர் சொன்னார்கள் என்றும் அவர்கள் வாகனத்தில் முத்துராமலிங்க தேவரின் படம் ஒட்டப்பட்டிருந்தது என்றும் அந்த வாகனங்களில் வந்தவர்கள் ரமேஷ்குமார் என்ற இளைய பசும்பொன், முத்துப்பாண்டியன், மணிகண்டன், கருத்தபாண்டியன், ஜமின், இராமசந்திரன், கனகசபாபதி, கண்ணன் என்று கேள்விப்பட்டேன் என்றும் அந்த வாகனத்தில் வந்தவர்கள் அவதூறாக பேசிக்கொண்டே எங்கள் அலுவலகத்தில் கற்களை வீசியதில் எங்கள் தெருவைச் சேர்ந்த மாரியப்பன், குணசேகரன் ஆகியோர்களுக்கு காயம் ஏற்பட்டது என்றும் எங்கள் கோவில் முன்பாக நின்று கொண்டு பட்டா கத்தி, அரிவாளை உயர்த்திக் காட்டி உயிரோடு வெட்டிக் கொல்லனும் என்று மிரட்டினார்கள் என்றும் அவர்கள் கார் கண்ணாடியை அவர்களே உடைத்துக் கொண்டார்கள் என்றும் அன்னை பத்ரகாளி என்ற லாரி கண்ணாடியையும், மற்ற ஒரு லாரி கண்ணாடியையும் உடைத்தார்கள் என்றும் பின்னர் கழுகுமலை ரோட்டில் உள்ள முஸ்லீம் சமுதாயத்தினரின் கடைகளையும் உடைத்தார்கள் என்றும் நாங்கள் திரும்ப வரும்போது எங்கள் இன மக்களை அழைத்து வந்து காந்திநகரை அழித்துவிடுகிறோம் என்று கூறிவிட்டு போனார்கள் என்றும் நாங்கள் வீட்டிற்கு திரும்பி விட்டோம் என்றும் இதுசம்பந்தமாக 01.10.2016

அன்று காவல் துணை கண்காணிப்பாளர் என்னை விசாரித்தார் என்று போலீசார் விசாரணையில் கூறியிருக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு எதிரிகளை அடையாளம் தெரியும் என்றும் ஆனால் எதிரிகள் அவர்கள் கேட்டுக்கொண்டதால் எதிரிகளுக்கு பயந்து அவர்களை காப்பாற்றும் நோக்கத்துடன் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் கு.வி.**

நான் சொன்ன நாள் சொன்ன நேரத்தில் அலுவலகத்தில் இருந்ததாக கூறுவதும், சங்கர் தியேட்டர் அருகில் சம்பவம் நடந்ததாக கேள்விபட்டேன் என்று கூறுவதும் எங்கள் அலுவலகத்தின் அருகில் முத்துராமலிங்க தேவர் படம் குறித்த கார்கள் வந்தது என்றும் அதில் இருந்தவர்கள் பட்டா கத்தி, கல், கம்பு ஆகியவற்றுடன் எங்கள் அலுவலகத்தை சேதப்படுத்தினார்கள் என்று கூறுவது பொய் என்றால் சரியல்ல. நான் சொன்ன நாள் சொன்ன நேரத்தில் சம்பவ இடத்தில் இல்லை என்றும் வாகனங்களை பார்த்ததில்லை என்றும் சொன்னால் சரியல்ல. வழக்கிற்காக நடக்காத சம்பவத்தை நடந்ததாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2025.10.31 17:32:44 +0530